# குறுந்தொகையில் இனவரைவியல்

**கு. கவிதா**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தெ. தி. இந்துக் கல்லூரி*
*நாகர்கோவில்*

**முன்னுரை**

மொழி மதம் போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகளுள் ஏதெனும் ஒன்றினால் பொதுவாக அடையாளப் படுத்தப்படும் குறிப்பிட்ட மக்கள் பிரிவினரைக் குறிப்பதே ‘இனம்’ என்பதாகும். அக்குறிப்பட்ட மக்கள் இனத்தின் பண்பாட்டைப் பற்றி விவரித்து எழுதுவதால் உருவாகும் படைப்பையே இனவரைவியல் (Ethnography) என்பர். அதனைத் திட்டமிட்டு படைக்கும் ஆய்வாளர் அல்லது எழுத்தாளரை இனவரைவியலர் (Ethnographer) எனக் குறிப்பிடுவர். ETHNO என்பதற்கு இனம் என்றும் GRAPHY என்பதற்கு எழுதுவது என்றும் பொருள்.

**இனவரைவியர் தரவுகள்**

இனவரைவியல் என்பது “பொதுவாக களப்பணியை அடிப்படையாகக் கொண்ட கண்ணோட்டமாகும். மரபான இனவரைவியல் என்பது ஒரு மானிடவியலாளர் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அல்லது ஒரு துணைப்பண்பாட்டைப் பற்றி, அப்பண்பாட்டைக் கொண்டிருக்கும் மக்களோடு குறிப்பிட்ட காலம் வரையில் தங்கியிருந்து அவர்களோடு வாழ்ந்து அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் பங்கேற்று ஆய்வு செய்து வெளிப்படுத்துவது” என ஆப்ரகாம் அவர்கள் கூறுகின்றார்.

ஆனால் “தற்போதைய ஆய்வுகள் களப்பணி சாராமல் சங்ககால மக்களின் வாழ்வியல், வரலாறு, நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் வாழ்க்கை முறைகள், சடங்குகள், தொழில்கள், புழங்கு பொருட்கள், மக்கள் குழுக்கள், உணவு, ஆடை அணிகலன்கள், வழிபாடு தெய்வங்கள், ஐம்பூதங்கள். போன்றவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவை அனைத்தும் இனவரைவியல் தரவுகள் ஆகும் என ஸ்டீபன் அவர்கள் கூறுகின்றனர்.

**கடவுள் வழிபாடு**

இவ்வுலகில் வேறு எந்த இனக்குழுவிற்கும் அல்லது வேறு எந்த மொழி பேசும் மக்கள் திரளுக்கும் இல்லாத தொன்மையும், பாரம்பரியமும் பண்பாட்டின் உச்சமும் தமிழ்ச் சமூகத்திற்டிகு உண்டு. ஆதித்தமிழ்ச் சமூகம் இயற்கையுடன் இயைந்தே தனது அனைத்து விதச் செயல்பாடுகளையும் நகர்த்தியுள்ளது. இயற்கையுடன் இணைந்த வாழ்வியல் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்ச் சமூகம் இயற்கையை தனது தெய்வமாக்கி அதனை வழிபட்டு வந்துள்ளது.

குறவர்கள் தினைப்புனம் காத்து அந்தக் கதிர்களை தெய்வத்திற்க்கு படைத்து மகிழ்கின்றனர். கடவுளுக்கு படைக்கப்படும் பொருள்கள் தூய்மையானதாக இருக்க வேண்டும். கடவுளுக்கு படைப்பதற்க்கு முன் அதனை யாரும் உண்ணக் கூடாது. உண்டால் அது தெய்வக் குற்றமாகிவிடும் என்ற நம்பிக்கை அன்று மட்டுமல்ல என்றன்றும் மக்களிடம் இடம்பெறக் கூடியதாகும் என்பதை,

**“புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்**
**கடிஉண் கடவுட்கு இட்ட செழுங்“குரல்” (குறு. 105,1-2)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**மன்ற மராசுத்த பேசும் முதிர் கடவுள் (குறு. 87, 1)**

என்ற பாடலில் தலைவி நல்லவரைக் காப்பதற்காக தெய்வத்திற்கு வழிபாடு செய்ததை அறியலாம். பெண்கள் மாலை நேரத்தில் வீட்டில், நெய் ஊற்றி விளக்கேற்றி கடவுளை வழிப்படும் போது நெல்லினையும் மலரினையும் தூவி வழிபட்ட செய்தியினை,

**கயல் ஏர் உண்கள் கனங்குழை மகளிர்**
**கையுறை ஆக நெய்பெய்து மாட்டிய**
**சுடர் துயர் எடுப்பும் புன்கண் மாலை (குறு. 398, 3-5)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**நேர்ச்சை, நோன்பு**

பாலை நில தெய்வமான கொற்றவைக்கு நேர்ச்சை செய்ம் வழக்கம் இருந்ததையும், சூலி (கொற்றவை) என்னும் தெய்வத்திற்கு நேர்ச்சை செய்யும் போது நோன்பு இருப்பதையும், நோன்பு இருக்கும் போது கையில் காப்பு கயிறு கட்டியிருந்ததை,

**விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்கு**
**பூணாங் கைந்நூல் யாவாம் (குறு. 218, 1-2)**

என்னும் பாடலழகள் உணர்த்துகின்றன.

மேலும் தெய்வங்களுக்கு கொரி, ஆடு, மாடு போன்றவைகளையும் பலியிட்டு நேர்ச்சை கடன் செய்வதும் காணப்படுகிறது. தலைவனைக் காணாமல் தலைவி உடல் மெலிகின்றாள். ஆனால் தாயோ இது தெய்வத்தால் வந்ததாகக் கருதி தெய்வத்திற்கு வெள்ளாட்டின் குட்டியை அறுத்துக் கொடுத்தலும், தினையரிசியினைப் பலியாகக் கூடையில் கொடுத்தும், இசைக்கருவிகளை, முழக்கியும் நேர்ச்சை செய்துள்ளதை.

**மறிக்குரல் அறுத்து.ஃ. தினைப் பிரப்பிரீஇச்**
**வேற்றுப் பெருந்தெய்வம் பலஉடன் வார்த்தி (குறு. 263, 1-4)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**மரம் பற்றிய நம்பிக்கை**

ஐந்திணை மக்கள் மரத்தில் தெய்வம் உறைவதாகக் கருதி வழிப்பட்டனர். ஊர் மன்றத்தில் உள்ள வேங்கை மரத்தில் தெய்வம் உறைவதாக மக்கள் நம்பினர். அதனால் சிறுவர்கள் அம்மரத்தில் ஏறவில்லை என்பதை,

**மன்ற வேங்கை மலர்பதம் நோக்கி**
**ஏறாது இட்ட ஏமப் பூசல் (குறு. 241, 4-5)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

செங்கடம்பு மரத்தில் தெய்வம் குடி கொண்டிருக்கும். அது அறமல்லாதவற்றைச் செய்பவர்களை வருத்தும் என்பதை

**மன்ற மராஅத்த பேமுதிர் கடவுள்**
**கொடியோர்த தொறுஉம் என்ப" (குறு. 87, 1-2)**

என்ற வரிகளில் அறிய முடிகிறது.

**பெய் பற்றிய நம்பிக்கை**

தெய்வம் கடவுள் என்பதற்கு எதிர்நிலையாக பேய் பிசாசு, பூதம் பற்றிய நம்பிக்கைகள் இனக்குழு வாழ்வில் தவிர்க்க முடியாததாகும். நாட்டுப்புற வழக்காற்றியலிலும் இனவரைவியல் கோட்பாடுகளில் ஆவியுலகக் கோட்பாடு (ANIMISUM) என்பது பேசப்படுகிறது.

இரவு நேரத்தில் பேய்கள் அச்சமின்றி திரியும். ஆனால் இடைவிடாது பெய்யும் மழையினால் பெய்களும் நடுங்கின என்பதை,

**பொழுதும் எல்லின்றுத பெயலும் ஓவாது**
**கழுது கண்பனிப்ப வீசும்........................... (குறு. 161, 1-2)**

என்ற பாடல் மூலமும், பேயினுடைய பற்கள் பெரிதாக கூர்மையாகக் காணப்படும் என்பதை,

**பழுஉப்பல் அன்ன பருஉகிர்ப்பா அடி (குறு. 180, 1)**

என்ற பாடல் மூலமும் தெரியலாம். இதில் பழுஉ என்பது பேயாகும்.

தலைவியின் மெலிவுக்கண்ட தாய் வேலனை அழைத்து வெறியாடல் நிகழ்த்தும் போது தலைவியைப் பேய் பிடித்துள்ளதாகக் கூறி ஆட்டின் குட்டியை அறுத்து

அதன் உதிரத்தால் தலைவியின் நெற்றியை தடவி விட்ட செய்தியினைத்,

**மறிக்குரல் அறுத்து ................................**

**பேஎய்க் கொள்இயள் இவள் எனப்படுதல்"** (குறு. 263, 1-5)

என்ற பாடல் மூலம் தரிந்து கொள்ளலாம்.

**வினைக்கோட்பாடு**

கடவுள், தெய்வம் என்பவைத் தாண்டி வினைப்பயன்களால் தான் நன்மை, தீமை அடைவதாக மக்கள் நம்பினர். தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் சந்தித்தே ஊழ்வினையால் நிகழ்ந்தது என்பதை,

**யாயும் ஞாயும் யார் ஆகியரோ?**

**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்** (குறு. 40, 1-2)

**கால்வரைந்து அமைத்தல் அல்லது அவாவயின்**

**சால்பு அளந்து இறிதற்கு யாஅம் யாரோ?** (குறு. 366, 1-2)

**துணைமலர்ப் பணையல் அன்னவர்**

**மணம் மகிழ் இயற்கை காட்டியோயே** (குறு.229, 6-7)

ஆகிய பாடல்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**மதி பற்றிய செய்தி**

மதியினைப் பாம்பு விழுங்குவதாகக் குறுந்தொகைப் பாடல் சுட்டுகிறது. பாம்பு மதியினைப் பற்றுவதால் கிரகணம் ஏற்படுவதாக கருதும் பங்கு இன்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கிறது. இதனை,

**அரவுறு மதியிற்கு இவணோர் போலக்**

**கலையார் ஆயினும், கண்இனிறு படிஇயர்** (குறு. 395, 4-5)

என்னும் பாடலால் அறியலாம்.

**பிறை தொழுதல்**

பிறை தொழும் வர்க்கம் தொன்றுதொட்டு பல நாகரீக மக்களிடையே நிலவி வருகிறது. பிறையினைப் பெண்கள் தொழுவதாகவே குறுந்தொகை குறிப்பிடுகிறது. தலைவனது பிரிவினால் துயருறும் தலைவி, கன்னி மகளிர் பலரும் தொழும் படியாக உள்ள வளைந்த பிறை எனக்குத் துன்பத்தைத் தரும் பொருட்டெ ஆகாயத்தின் கண் பிறந்துள்ளது எனக் கூறுவதை

**வளை உடைத்தனையது ஆகி, பலர் தொழச்**

**செவ்வாய் வானத்து ஐடியனத் தோன்றி,**

**இன்னாப் பிறந்தன்று, பிறையே"** (குறு. 307, 1-3)

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

**தொழதுகலான் பிறையின் தோன்றி"** (குறு. 178, 5)

என்ற வரி கன்னியர் தொழும் மூன்றாம் பிறை காண்பதற்கு அரியது என்பதாகக் கூறுகிறது.

**கட்டுப்பார்த்தல்**

கட்டுப்பார்த்தல் என்பது முறத்தில் நெல்லை வட்டமாகப் பரப்பி வைத்துத் தெய்வங்களைப் பாடி எண்ணிப் பாத்துக் கட்டுவிச்சி காணும் குறி என்பர்

தலைவியின் நோய் தெய்வத்தால் வந்தது எனக் கருதி நற்றாயும், செவிலித்தாயும் கட்டுவிச்சியிடம் கட்டுப்பர்ப்பதை,

**தன்கண் கண்டது பொய்க்குவது அன்றெ** (குறு. 26, 5)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**பிறப்பு இறப்பு பற்றிய நம்பிக்கைகள்**

குறுந்தொகைக் கால மக்கள் தம்முடைய வினையின் பயனுக்குத் தக்கவாறே பிறப்புக்கள் அமையும் என்றும் அவை தொடரும் தன்மை உடையன என்றும் நம்பினர்.

தலைவன் தலைவி சந்திப்பால் தலைவிக்குக் காவல் அதிகரிக்க பிரிவுற்ற தலைவி இனி வரும் பிறவியிலாவது தலைவனுடன் இணைந்து இன்புற்று வாழும்படியாக இப்போதே என் உயிர் செல்லட்டும் எனக் கூறுவதனை,

**"இருவேம் ஆகிய உலகத்து**

**ஒருவேம் ஆகிய புன்மை நாம் உயற்கே" (குறு. 57, 5-6)**

என்ற பாடல் சுட்டுகிறது.

தலைவன் பால் கொண்ட அளவற்ற அன்பினால் தலைவி,

**"இன்மை மாறி மறுமை ஆயினும்,**

**நீ ஆகியர்எம் கணவனை**

**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே" (குறு. 49, 3-5)**

என்று தலைவனே மறுமையிலும் தனக்குக் கணவராக வர வேண்டும் என்று தன் விருப்பத்தைத் தெரிவிக்கின்றாள். தலைவனும் அவ்வாறே கூறுவதனை,

**"இருமுறை என ஒன்று இன்றி**

**மறுமை உலகத்து மன்னுதல் பெறினே" (குறு. 199, 7-8)**

என்ற பாடல் எடுத்தியம்புகிறது.

**புழங்கு பொருள் பண்பாடு**

இனவரைவியல், நாட்டுப்புற வழக்காற்றியல் ஆகியத் துறைகளைப் பொருத்தவரை புழங்கு பொருள் பண்பாடு என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். புழங்கு பொருட்கள் மக்கள் தங்களுக்காகத் தாங்களே செய்வித்துப் பயன்படுத்தும் பொருட்கள் என்பதால் அவை சிறப்பிடம் வகிக்கன்றன.

மக்கள் தானியங்களை இடிப்பதற்கும், பொடிப்பதற்கும் உரல் மற்றும் உலக்கைகளைப் பயன்படுத்தியுள்ளனர். குறுந்தொகையிலும், பச்சை நெல்லை உரலில் இட்டு உலக்கையால் இடித்ததை,

**பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை (குறு. 238, 1)**

என்ற பாடல் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

வெந்நீர் தன் தன்மையிலிருந்து மாறாதிருக்கும் பொருட்டு ஆறாமல் பாதுகாக்க இன்று தெர்மாஸ்குடுவை (பிளாஸ்க்) பயன்படுத்தப்படுகிறது. இது குறுந்தொகையில் சேமச்செப்பு என்று அழகுறச் சுட்டப்பட்டதை,

**அற்சிர வெய்யவெப்பத் தண்ணீர்**

**சேமச் செப்பில் பெறீஇயரோ நீயே (குறு. 277, 4-5)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**உணவுப் பண்பாடு**

குறுந்தொகையில் உணவு பற்றிய பழக்கவழக்கங்கள் பல்வேறு முறைகளில் விளக்கப்பட்டுள்ள பச்சை நெல்லை உலக்கையால் குத்தி உண்ணுவதை அவல் என்பவர். இதனை

**பாசவல் இடித்த கருங்கார் உலக்கை**

**ஆய்கதிர் நெல்லின் வரம்பு அணை (குறு. 238, 1-2)**

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

இன்று வெல்லக்கட்டி என்று அழைக்கப்பட்டது. அன்று 'தெம்பூங்கட்டி' என்று அழைக்கப்பட்டது. இத்தெம் பூங்கட்டியை மக்கள் விரும்பி உண்டனர் என்பதை,

**வேம்பின் பைங்காய் என்தோழி தரினே**

**தேம்பூங் கட்டி என்றனிர் இனியே (குறு. 196, 1-2)**

என்னும் அடிகளால் அறியலாம்.

அப்போதும், இப்போதும், பால் சிறந்த உணவுப் பொருளாகவே கருதப்பட்டது. குறுந்தொகை சிறந்த ஊட்டச்சத்தான பாலை,

**செம்பொற் புனைகலத்து தம்பொரிக் கலந்த**

**பாலும் பலஎன உண்ணாள்" (குறு. 356, 6-7)**

என்று கூறுகிறது.

பாலைத் தயிராக்கித் தயிர்க்குழம்பு செய்து உண்டதை,

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**

**தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர் (குறு. 167, 1-4)**

என்னும் வரிகள் உணத்துகின்றன.

**குறும்பூழ் (காடை) என்னும் பறவையினைக் கறி சமைத்து உண்டதனை,**

**நெய்கனி குறும்பூழ் காயம் ஆக" (குறு. 389, 1)**

என்ற வரியின் மூலம் அறியலாம்

அன்றைய நாட்களில் ஆண் பெண் இருபாலரும் கள் உண்ணும் பழக்கத்தினைக் கொண்ழருந்தனர் என்பதை,

**இன்கடுங் கள்ளின் மணமில கமழும் (குறு. 330, 5)**

**மகிழ்ந்ததன் தலையும் நற உண்டாங்கு (குறு. 165, 1)**

என வரும் வரிகள் மூலம் அறியலாம்.

பனங்கள்ளுடன் பனம் நுங்கினையும் சேர்ந்து உண்டனர் என்பதை,

**கள்ளில் கேளிர் ஆத்திரை உள்ளூர்**

**ஓங்கு இரும் பெண்ணை நுங்கொடு பெயரும் (குறு. 293, 1-3)**

என்னும் வரிகளால் தெரிந்து கொள்ளலாம்.

**முடிவுரை**

இவ்வாறு விளைந்த தினைக்கதிர்களை முதலில் தெய்வத்திற்குப் படைக்கும் வழக்கம் இன்றும் விவசாயிகளிடம் நீடித்து நிற்பதைக் காணலாம். மேலும் மழை வேண்டியும், பயிர் செழிக்கவும். தன் நிலையினை மேன்மேலும் உயர்த்தவும் கடவுளை வழிபட்டுள்ளனர். ஆக சங்ககால தெய்வம் என்பது மதரீதியாக நிறுவப்பட்ட தெய்வம் என்ற நிலையில் இல்லை என்பது தெளிவாகியது.

இன்று இசக்கியம்மன், சுடலைமாடன் போன்ற தெய்வங்களுக்கு கோழி, ஆடு, மாடு போன்ற விலங்குகளைப் பலியிட்டு நேர்ச்சைக் கடன் தீர்த்து கொள்ளும் பழக்கத்தையும் நாம் காண முடிகிறது.

இவ்வாறு மரம் பேய் ஊழ்வினை ஆகியவற்றில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையினையும், மதியை பாம்பு விழுங்குதல், பிறையை வணங்குதல், கட்டுப்பார்தல் போன்ற செய்திகளையும் அறிய முடிந்தது. மேலும் குறுந்தொகை கால மக்கள் பயன்படுத்திய புழங்கு பொருட்கள் அவர்களுடைய உணவு முறைகள் ஆகியவற்றை பற்றியும் தெரிந்து கொள்ள முடிந்தது.